[2003 நவம்பர் 4

26—

அரசுக் கல்லூரி அமைத்தல்

***19089—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் அரசுக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகள் அனைத்தும், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுவிட்ட நிலையில், வானூர் என்னும் இடத்தில் புதிதாக பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தொடங்குவது தொடர்பாக, வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், தேவையின் அடிப்படையில் பரிசிலித்து பரிந்துரை செய்தால், புதிய கல்லூரி தொடங்குவது குறித்து அரசால் முடிவு எடுக்கப்படும். அதேபோல சுயநிதி அடிப்படையிலும் கல்லூரி தொடங்க, கல்லூரி இயக்குநருக்கு முறையாக விண்ணப்பித்தால் அரசு கொள்கை முடிவின் அடிப்படையில் சுயநிதிக் கல்லூரி தொடங்குவது குறித்தும், அதற்கு அனுமதி அளிப்பது குறித்தும் முடிவு எடுக்கும்.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வானூர் தொகுதியில் 10-க்கும் மேற்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ள மாணவ மாணவிகள் படிக்கின்றனர். அவர்கள் சுமார் 50 கிலோ மீட்டருக்கு மேல் வெளியே சென்று கலைக் கல்லூரியில் படிப்பதற்கு திண்டிவனம், கடலூர் அல்லது பக்கத்து மாநிலம் பாண்டிச்சேரிக்குச் சென்று படிக்க வேண்டி உள்ளதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அடுத்த நிதியாண்டிலாவது அப்பகுதி மாணவ மாணவியர்கள் 100 சதவிகிதம் கல்வியறிவைப் பெற அரசு கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

2003 நவம்பர் 4]

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் இரண்டு அரசுக் கலைக் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதிக் கல்லூரிகள் அமைந்து உள்ளன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணவ மாணவியர்களின் உயர்கல்வித் தேவையை நிறைவு செய்வதாக இருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம், தேவையின் அடிப்படையில் அரசுக்குக் கருத்துரு அனுப்பினால் அது குறித்து அரசு, கொள்கையின் அடிப்படையில் முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

27—

அரசு அருங்காட்சியகம்

***30608—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் அரசு அருங்காட்சியகம், நவீன தொழில் நுட்பத்துடன் புதுப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை அருங்காட்சியகக் கட்டடத்தை அதன் பழமை மாறாமல் தொல்லியல் முறைப்படி பலப்படுத்தி பாதுகாக்க தேவையான முழு மதிப்பீட்டு விவரம் பெற்று நல்லமுறையில் காட்சிக்கூடங்களை நவீனப்படுத்த உரிய திட்டத்தை, துறை, அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. அத்தகைய முழுமையான வரைவு, துறையிடமிருந்து அரசுக்குக் கிடைக்கப் பெற்றதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.